நம்பகத்தன்மையான மின்சார வழங்கல் மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை மின்சார சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 19 ஆம் திகதிய 3409-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. மின்சார வழங்கல் மற்றும் விநியோக முறைமைகளின் வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மையை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 24,228 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 160.20 மில்லியனானதுடன் அதில் ரூபா 17,392 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 115 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 6,836 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 45.2 மில்லியன் இலங்கை மின்சார சபையால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூன் 29 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 நவம்பர் 29 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னுடைய அறிக்கையின் அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் மீதிகள் இலங்கை கணக்கீட்டு நியமம் 21 இிற்கமைய அறிக்கையிடல் திகதியில் இ.ரூபா பெறுமதிக்கு மாற்றப் பட்டிருக்கவில்லை இதன் விளைவால் நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்ட கடன் மீதி மற்றும் அபிவிருத்தி செலவினம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கிளைக் கணக்குகளின் தொகுதியாக மேலதிக பொது முகாமையாளரின் (செயற்திட்டங்கள்) கீழ் செயற்திட்ட கணக்குகளை வடிவமைப்பது இலங்கை மின்சார சபையின் நடைமுறையாக உள்ளது. இது காலங்காமான கணக்காய்வாளர் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் முறைப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் எவ்வித வினாவும் எழுந்திருக்கவில்லை. மேலதிக பொது முகாமையாளரின் (செயற்திட்டங்கள்) கீழ் சகல செயற்திட்டங்களும் நிறைவேற்றப்பட்டிருந்தது அதேநேரம் கடன் கைதவிர்ப்பை மற்றும் இலங்கை மின்சாரசபை கொள்கை மற்றும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தத்துவங்கள் என்பவற்றின் வழியில் சம்பந்தப்பட்ட சொத்து நிர்மாணம் பதியப்படுகின்றன. சகல கொடுக்கல் வாங்கல்களும் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வரலாற்று கிரய எண்ணக்கருவின் கீழ் பொதுப் பேரேட்டில் பதியப்பட்டன. சம்பந்தப்பட்ட கடன்கள் விதிக்கப்பட்டவாறு நிதி அமைச்சின் வழிகாட்டலின் வழியில் இலங்கை மின்சார சபை நிதி முகாமையாளரால் பேணப்பட்டு நிர்வகிக்கப்பட்டு மற்றும் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன. எனவே, கடன்கள் இலங்கை மின்சார சபை தலைமை அலுவலகத்தின் பொதுப் பேரேட்டின் கீழ் பதியப்படுகின்றன. | இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கமைய நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டுகளின் செலுத்த வேண்டியவைகளின் காட்டப்பட்ட ரூபா 20.8 மில்லியன் தொகையான தாமதக் கட்டணங்கள் 2021 ஆம் ஆண்டில் ஏனைய வருமானமாக பதியப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இது வருமானத்தின் கீழ் தாமதக் கட்டண கணக்கிற்கான தொகையை செலவு வைப்பதன் மூலம் திருத்தப்பட்டிருந்தது. | தொகுதி 1, பொதி 1 இன் தாமதக் கட்டணம் தொடர்பான இந்த கோரிக்கை விநியோகப் பிரிவு 02 ஆல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த தொகை 2021 ஆம் ஆண்டிறகான நிதிக் கூற்றில் ஏனைய வருமானமாக R1300 இன் கீழ் பதியப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் போது நாங்கள் உடன்பட்டிருந்த 2021 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் பிரகாரம் வருமானத் குறியீடு R1315 (தாமதக் கட்டணங்கள்) தொடர்பில் மாற்ற வேண்டு என்பது கணக்காய்வளரின் அபிப்பிராயமாக இருந்தது. | முன்னைய ஆண்டு கணக்காய்வு அவதானிப்பு பிரகாரம் தாமதக் கட்டணங்கள் செயற்திட்ட வருமானத்தின் கீழ் காட்ட வேண்யதாக இருக்கவில்லை. சரியான கணக்கீட்டு கொள்கையை பிரயோகிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஆசிய அபிவிருத்தி வங்கியானது செயற்திட்டத்திற்கு ஐ.அ.டொலர் 115 மில்லியன் நிதியளிப்பிதற்கு உடன்பட்டிருந்ததுடன் இது ஐ.அ.டொலர் 90 மில்லின் வரை குறைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டில் இந்த தொகையை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த தகவல் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2016 மார்ச் 23 ஆந் திகதிய 1/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவு | 2022 திசெம்பர் 31 வரை ரூபா 24.5 மிலலியன் கூட்டுத் தொகையான மிகையூத்தியங்கள் செயற்திட்ட நிதிகளை பயன்படுத்தி செயற்திட்ட உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | இது இலங்கை மின்சார சபையினுடைய கொள்கை மற்றும் சகல இலங்கை மின்சார சபை ஊழியர்களிற்கான வழிகாட்டலுக்கமைய உள்ளது. | வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை கடுமையாக பின்பற்ற வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்

| இல | கூறு /உபகூறு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தாமதம் / கணக்காய்வு அவதானிப்பு | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செய லாற்றல | அடையப்பட்ட செயலாற்றல் | | | |
| | | | பௌதீக | நிதி | | |
| (அ) | **பொதி 4**<br>33kV 2 SSBB குழுவின் 270kV, 33kV இல் 13 கோபுர வழிகள் நிர்மாணம் | 100 | 45.10 | 39.39 | ஒப்பந்தம் 2019 மே 30 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 ஒக்தோபர் 27 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டதுடன் நிர்மாணத்தில் குறிப்பிடத்தக்களவு தாமதங்கள் அவதானிக்கப்பட்டது. | தாமதத்திற்கான காரணம் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | **பொதி 5**<br>தொகுதி 1: பொருட்கள் வழங்கல் மற்றும் விநியோகம்: மூன்று கட்ட அவசர மீட்டர் மற்றும் மொடம்கள் (25,000 எண்) | 100 | 100 | 99 | ''முறைமை பூர்த்தியாக்கலின் மேற்படி பொருத்துதல், செயற்படுத்தல் மற்றும் பாரமரித்தல் மீதான பயிற்சி 2022 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. |

**முகாமைத்துவத்தின் பதில்**

**பொதி 4** 5 வழிகளின் மண்பரிசொதனை மற்றும் கோபுர ஆதரவு 100% பூர்த்தியாக்கப்பட்டது. 3 வழிகளிறகாக விபர வடிவமைத்தல் 100% பூர்த்தியாக்கப்பட்டது. ஏனைய சகலவற்றிற்கும் மற்பரிசோதனை, கோபுர ஆதரவு மற்றும் விரிவான வடிவமைத்தல் 50% இற்கு மோலக உள்ளதுடன் வேலைகள் தொடருகின்றன. சொய்சி வழி விரிவான 80 % ஆக உள்ளதுடன் கோபுர ஆதரவு 90% பூர்த்தியாக்கப்பட்டது. மாத்தறை வழி மண் பரிசொதனை மற்றும் விரிவான 80 % பூர்த்தியாக்கப்பட்டது. 14 வழிகளின் அடித்தள நிர்மாண வேலைகள் தொடங்கப்பட்டு தொடருகின்றன. அந்த 14 வழிகளிலிருந்து மாகே-மயேலிய வழி 100% பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. 3 வழிகளின் கோபுரமொழுப்புதல் வேலைகள் தொடங்கப்பட்டு செயற்பாட்டில் உள்ளன. அடித்தள நிர்மாணம் 45.25 % பூர்த்தியாக்கப்பட்டது. செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 52.29 % ஆக உள்ளதுடன் நிதி முன்னேற்றம் 55.58 % ஆக உள்ளது.

**பொதி 5** ''முறைமை பூர்த்தியாக்கலின் பொருத்துதல், செயற்படுத்தல் மற்றும் பாரமரித்தல் மீதான பயிற்சிக்கான மிகுதி கொடுப்பனவு நிலுவையாக உள்ளது. (பயிற்சி இடம்: இலங்கை)''

**கணக்காய்வாளரின் பரிந்துரை**

**பொதி 4** வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பந்தகாரரை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும்.

**பொதி 5** கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களை பயன்படுத்த இயலக்கூடியவாறு வழங்குநரிடமிருந்து தேவையான பயிற்சியை பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### 3.2 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்ட ஆதனம், பொறி மற்றும் எபகரணங்களைப் பதிவதற்கு முறையான நிலையான சொத்துப் பதிவேடொன்றை பேணுவதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவெடு நிதிக் கிளை DD1 மறறும் செயற்திட்ட பிரிவால் முறையாக பேணப்பட்டிருந்ததுடன் இது கணக்காய்வின் போது கணக்காய்வாளர்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிலையான சொத்துப் பதிவேடு தொடர்ச்சியாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 காணிச் சுவீகரிப்பு தொடர்பான பிரச்சனைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| நிர்மாணக் குழுவிற்கு CEB ஆல் 16 காணித் துண்டுகள் சுவீகரிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 04 காணித் துண்டுகள் மாத்திரமே சுவீகரிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்காக தேவைப்பட்ட சகல காணித் துண்டுகளும் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | காணி சுவீகரிக்கின்ற நடைமுறைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |